www.Padasalai.Net www.CBSEtips.in

**பாடக்குறிப்பு - பொருளியல்**

**நாள்** :

**வகுப்பு** : 12

**அத்தியாயம்** : 1 (பகுதி -1)

**பாடம்** : பேரியல் பொருளாதாரம்

**தலைப்பு** : பேரியல் பொருளாதாரம் பொருள் – முக்கியத்துவம் – பரப்பெல்லை – பொருளாதார அமைப்பு மற்றும் அதன் வகைகள்.

**துணைக் கருவிகள்:** வரைபடங்கள், PPT Videos, Educational Games, Newspaper cuttings, Magazines, QR Codes, Online Test.

**கற்றல் நோக்கங்கள்:**

பேரியல் பொருளாதாரத்தின் பரிணாம வளர்ச்சி, முக்கியத்துவம் மற்றும் அடிப்படை கருத்துக்கள் ஆகியவற்றை தெளிவு படுத்துவது.

**ஆயத்தப்படுத்துதல்:**

**1.**நாட்டின் அடிப்படைப் பிரச்சைனைகளைக் கேட்டறிதல்.

2.சிறிய மற்றும் பெரிய என்பதற்கான விளக்கங்களை எடுத்துக்காட்டுகள் மூலம் கூறுதல்.

R.THALAMPOORAJAN

**கற்றல் மற்றும் கற்றல் செயல்பாடுகள்:**

நவீன பொருளாதாரத்தின் தந்தை J.M.கீன்ஸ் அவர்களின் புத்தகம் மற்றும் வெளிவந்த ஆண்டு தெரியப்படுத்துதல்.

பேரியல் பொருளாதாரம்: பேரியல் பொருளாதாரம் என்பது பொருளாதார அமைப்பு முழுமையையும் படிப்பது ஆகும்.

இதன் வேறு பெயர்: 'வருவாய் கோட்பாடு'

**பாட வளர்ச்சி:**

**முக்கியத்துவம்:**

1.அடிப்படை பிரச்சனைகளுக்கு தீர்வு காணுதல்.

2. தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுப்பது. 3.அறிவியல் பூர்வ விசாரணைகளை ஏற்படுத்துவது.

4.பொருளாதார குறியீடுகளை பகுத்தாய்தல்.

5.பொருளாதார நெருக்கடிக்கு சரியான கொள்கைகள் மூலம் தீர்வு காணுதல்.



Downloaded From www.nagaicollege.com

www.Padasalai.Net www.CBSEtips.in

**பரப்பெல்லை:**

**1.தேசிய வருவாய்**:

தேசிய வருவாயை கணக்கிடுதல் மற்றும் தேசிய வருவாயின் துறைகளின் பங்கு போன்றவை பேரியல் பொருளாதார பகுத்தாய்வின் அடிப்படை அம்சங்கள் ஆகும்.

**2.பணவீக்கம்:**

பணவீக்கம் என்பது பொதுவான விலை அளவு தொடர்ந்து அதிகரிப்பதைக் குறிக்கும்.

**3.வாணிபச் சுழற்சி:**

மொத்த பொருளாதாரக் காரணிகளை அடிப்படையாகக் கொண்டு ஒரு நாட்டின் வாணிபச் சுழற்சி மாற்றங்களை தெரிந்து கொள்ள முடிகிறது.

**4.வறுமை மற்றும் வேலையின்மை:**

வளங்கள் நிறைந்த நாடுகளிலும் வறுமை மற்றும் வேலை இன்மை மிகப் பெரிய பிரச்சினையாக உள்ளது. இதற்கு தீர்வு காண நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

**5.பொருளாதார வளர்ச்சி:**

பேரியல் பகுத்தாயின் மூலம் பொருளாதார அமைப்பின் வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்தை தீர்மானித்தல்.

R.THALAMPOORAJAN

**6.பொருளாதாரக் கொள்கைகள்:**

அடிப்படைப் பிரச்சனைகள் மற்றும் வளர்ச்சி அடைவதற்கு பொருளாதாரக் கொள்கைகள் தேவைப்படுகின்றன.

**பொருளாதார அமைப்பு மற்றும் அதன் வகைகள்:**

'மக்கள் தங்கள் பிழைப்பை அமைத்துக் கொள்ளும் முறையை குறிப்பது' பொருளாதார அமைப்பு

J.R.ஹிக்ஸ்

**பொருளாதார அமைப்பின் அடிப்படை நடவடிக்கைகள்:** உற்பத்தி மற்றும் நுகர்வு

பொருளாதாரம் அமைப்புகளில் பல்வேறு அடிப்படையில் வகைப்படுத்தலாம்:

1.வளர்ச்சி நிலை
2.நடவடிக்கைகளின் முறை
3.நடவடிக்கைகளின் அளவு
4 செயல்படும் தன்மை
5.செயல் பரப்பு தன்மை
6.முன்னேற்ற தன்மை
7.தேசிய வருவாய் அளவு



Downloaded From www.nagaicollege.com

## வலுவூட்டல்:

புதிய மற்றும் கடினமான கருத்துக்களை QR CODE SCAN செய்து விளக்கிக் கூறுதல்.

அட்டவணை மற்றும் வரைபடத்தை மீண்டும் வரையச் செய்தல்.

## குறைதீர்கற்றல்:

மெல்லக் கற்கும் மாணவர்களுக்கு பாடப் புத்தகத்தில் உள்ள குறு மற்றும் சிறு வினாக்களுக்கு விடை அளிக்குமாறு பயிற்சி அளித்தல்.

**தொடர்பணி: விளக்கமறியச் செய்தல்:**

**1.தேசிய வருவாய்**

**2.பணவீக்கம்**

**3.வாணிபச் சுழற்சி**

**4.வறுமை மற்றும் வேலையின்மை**

**5.பொருளாதார வளர்ச்சி**

**மதிப்பீட்டு வினாக்கள்:**

1.பேரியல் பொருளியலில் இலக்கணம் தருக.

2.பணவீக்கம் என்ற பதத்தின் பொருள் தருக.

3.பொருளாதாரம் என்பதன் பொருள் யாது?

4.பேரியல் பொருளாதாரத்தின் முக்கியத்துவம் யாது?

5.பேரினப் பொருளியலின் பரப்பெல்லையை விவரி.

R.THALAMPOORAJAN
www.Padasalai.Net



Downloaded From www.nagaicollege.com

**பாடக்குறிப்பு - பொருளியல்**

**நாள்** :

**வகுப்பு** : 12

**அத்தியாயம்** : 1 (பகுதி -2)

**பாடம்** : பேரியல் பொருளாதாரம்

**தலைப்பு** : பொருளாதார அமைப்பு முறை - முதலாளித்துவ பொருளாதார அமைப்பு – சமத்துவ பொருளாதார அமைப்பு - கலப்பு பொருளாதார அமைப்பு - இயல்புகள், நன்மைகள், குறைகள் - வருவாயின் வட்ட ஓட்டம்

**துணைக் கருவிகள்**: வரைபடங்கள், PPT Videos, Educational Games, Newspaper cuttings, Magazines, QR Codes, Online Test.

**பாடத்தின் நோக்கங்கள்:**

ஒரு பொருளாதார அமைப்பின் செயல்பாட்டினை புரிந்து கொள்வது.

**ஆயத்தப்படுத்துதல்:**

R.THALAMPOORAJAN

**1.அரசாங்கம் என்றால் என்ன?**

**2.தனியார் என்றால் என்ன?**

**3.அரசாங்கத்தால் விளையும் நன்மைகள் என்ன?**

**4.தனியாரினால் விளையும் நன்மைகள் என்ன?**

**5.அரசாங்கமும், தனியாரும் இணைந்து இருந்தால் எப்படி இருக்கும்?**

**வினாக்கள் மூலம் மாணவர்களை ஆயத்தப்படுத்தி பாடத்திற்குள் நுழைதல்.**

**கற்றல் மற்றும் கற்றல் செயல்பாடுகள்:**

**பாட வளர்ச்சி:**

**பொருளாதார அமைப்பு முறை:**

**1.முதலாளித்துவ பொருளாதார அமைப்பு:**

முதலாளித்துவத்தின் தந்தை ஆடம் ஸ்மித்.

இங்கு பொருளாதார நடவடிக்கைகளை தீர்மானிப்பதில் அரசாங்கத்தின் பங்கு குறைவாகவும் சந்தையின் பங்கு அதிகமாகும் இருக்கும்.



Downloaded From www.nagaicollege.com

**இயல்புகள்:**

1.தனியார் சொத்துரிமை மற்றும் பரம்பரைச் சட்டம் 2. தெரிந்தெடுப்பதில் சுதந்திரம்

3.இலாப நோக்கம் 4.போட்டியின் சுதந்திரம்

5.விலை இயங்கு முறை 6.அரசின் பங்கு

7.வருமான ஏற்றத்தாழ்வு

**நன்மைகள்:**

1.தானாக இயங்குதல் 2.வளங்களை திறமையாக பயன்படுத்துதல்

3.கடின உழைப்பிற்கு வெகுமதி 4.பொருளாதார முன்னேற்றம்

5.நுகர்வோர் இறையாண்மை 6.மூலதன ஆக்கவீதம் அதிகரித்தல்

7.புதிய தொழில்நுட்ப முன்னேற்றம்

**குறைகள்:**

1.வருமானம் மற்றும் செல்வச் செறிவு 2.வளங்கள் வீணடிக்கப்படுதல்

3.வகுப்புப் போராட்டம் 4.வாணிபச் சூழல்

5.அத்தியாவசியமில்லா பொருட்களின் உற்பத்தி R.THALAMPOORAJAN

**2.சமத்துவ பொருளாதார அமைப்பு:**

சமத்துவத்தின் தந்தை: கார்ல் மார்க்ஸ்

ஒரு சமத்துவ பொருளாதார அமைப்பின் அனைத்து வளங்களையும் அரசே உரிமம் ஆக்கி பயன்படுத்தும். பொது நலமே அனைத்து பொருளாதார நடவடிகளில் பின்புல முக்கிய நோக்கமாகும்.

வேறு பெயர்கள்:

1.திட்டமிட்ட பொருளாதாரம் 2. கட்டளை பொருளாதாரம்

**இயல்புகள்:**

1.உற்பத்தி மூலங்களின் பொது உரிமம் 2.திட்டமிடல்

3.அதிகபட்ச சமூக நலன் 4.போட்டியின்மை

5.விலை இயங்கு முறை இல்லாமை 6.வருவாயில் சமத்துவம்

7.வாய்ப்புகளில் சமத்துவம் 8.வகுப்பு பேதமில்லா சமூகம்

www.Padasalai.Net



Downloaded From www.nagaicollege.com

**நன்மைகள்:**

1.ஏற்றத்தாழ்வுகளில் குறைவு 2.வளங்கள் அறிவார்ந்த முறையில் ஒதுக்கீடு

3.வகுப்பு சண்டைகள் இல்லாமை 4.வாணிக சூழலுக்கு முடிவு

5.சமூக நலம் முன்னேற்றம்

**தீமைகள்:**

1.சிகப்பு நாடா மற்றும் அதிகார வர்க்கம் 2. ஊக்கமில்லாமை

3.தெரிவு செய்வதில் சுதந்தர குறைவு 4. அதிகாரம் குவிதல்

**3.கலப்பு பொருளாதார அமைப்பு:**

கலப்பு பொருளாதர அமைப்பு முறையை தனியார் மற்றும் பொதுத் துறைகள் இணைந்து பொருளாதார மேம்பாட்டுக்காக பணியாற்றும்.

**தன்மைகள்:**

1.சொத்து உற்பத்திச் சாதனங்களின் உரிமம்

2.பொது மற்றும் தனியார் துறைகள் இணைந்திருக்கும் 3. பொருளாதார திட்டமிடல்
4.பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு தீர்வு 5.சுதந்திரமும் கட்டுப்பாடும்.

R.THALAMPOORAJAN

**நன்மைகள்:**

1.அதிவேக பொருளாதார வளர்ச்சி 2.சமமான பொருளாதார வளர்ச்சி

3.வளங்களை சரியாக பயன்படுத்துவது 4.பொருளாதார சமத்துவம்

5.சமூகத்திற்கு சிறப்பு

**தீமைகள்:**

1.ஒருங்கிணைப்பு இல்லாமை 2.போட்டி மனப்பான்மை

3.திறமையின்மை 4.தேசியமயமாக்கல் பற்றிய பயம்

5.விரிவடையும் சமத்துவமின்மை




Downloaded From www.nagaicollege.com

## வருவாயின் வட்ட ஓட்டம்:


### 1.இரண்டு துறை மாதிரி

Y = C+I





### 2.மூன்று துறை மாதிரி

Y = C+I+G




### 3. நான்கு துறை மாதிரி

Y = C+I+G+(X - M)




www.Padasalai.Net
MPOORAJAN



Downloaded From www.nagaicollege.com

## வலுவூட்டல்:

புதிய மற்றும் கடினமான கருத்துக்களை QR CODE SCAN செய்து விளக்கிக் கூறுதல்.

## குறைதீர்கற்றல்:

மெல்லக் கற்கும் மாணவர்களுக்கு பாடப் புத்தகத்தில் உள்ள குறு மற்றும் சிறு வினாக்களுக்கு விடை அளிக்குமாறு பயிற்சி அளித்தல்.

**மதிப்பீட்டு வினாக்கள்:**

1.முதலாளித்துவம் என்றால் என்ன?

2.பொருளாதார மாதிரியின் இலக்கணம் தருக.

3.வருமான வட்ட ஓட்டம் வரையறு.

4.முதலாளித்துவத்தின் சிறப்பினை வரிசைப்படுத்துக.

5.சமத்துவத்தின் குறைகளைக் கூறுக.

6.கலப்புப் பொருளாதாரத்தின் முக்கிய இயல்புகளை எடுத்து எழுதுக.

7.இருதுறை சூழல் ஓட்ட மாதிரி விளக்குக.

8.முதலாளித்துவ, சமத்துவ, கலப்பத்துவம் இவற்றின் தன்மைகளை ஒப்பிடுக.

R.THALAMPOORAJAN
www.Padasalai.Net



Downloaded From www.nagaicollege.com

**பாடக்குறிப்பு - பொருளியல்**

**நாள்** :

**வகுப்பு** : 12

**அத்தியாயம்** : 2

**பாடம்** : தேசிய வருவாய்

**தலைப்பு** : தேசிய வருவாய் பொருள் - தேசிய வருவாயின் அடிப்படை கருத்துருக்கள் – தேசிய வருவாயை அளவிடும் முறைகள்

**பாடத்தின் நோக்கங்கள்:**

1.தேசிய வருவாயின் பொருள் மற்றும் அதனுடைய தொடர்புடைய கருத்துக்களை புரிதல்.

2. தேசிய வருவாயை கணக்கிடும் முறைகளை அறிதல்.

**துணைக் கருவிகள்:** வரைபடங்கள், PPT Videos, Educational Games, Newspaper cuttings, Magazines, QR Codes, Online Test.

**ஆயத்தப்படுத்துதல்:**




வளங்கள் உற்பத்தி செய்யப்பட்டு சந்தைக்கு வந்த உடன் நுகர்வோர்களால் நுகரப்படும்போது வருமானம் கிடைக்கிறது.

**பாட வளர்ச்சி:**

**கற்றல் மற்றும் கற்றல் செயல்பாடுகள்:**

தேசிய வருவாய் என்பது ஓர் ஆண்டில் ஒரு நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட மொத்த பண்டங்கள் மற்றும் பணிகளின் பணமதிப்பாகும்.

**தேசிய வருவாயின் அடிப்படை கருத்துருக்கள்:**

1.மொத்த உள்நாட்டு உற்பத்தி: **GDP = C + I + G + (X – M)**

2.மொத்த தேசிய உற்பத்தி: **NDP = GDP – DEPRECIATION**



Downloaded From www.nagaicollege.com

3. நிகர தேசிய உற்பத்தி: **NNP = GNP - தேய்மான கழிவு**

4.காரணி செலவில் நிகர தேசிய உற்பத்தி:

காரணிசெலவில் NNP= சந்தை விலையில் NNP – மறைமுகவரி + மானியம்

5.தனி நபர் வருமானம்

6.செலவிடக்கூடிய வருமானம்

7.தலா வருமானம்:

$$\text{தலாவருமானம்} = \frac{\text{தேசிய வருமானம்}}{\text{மக்கள் தொகை}}$$

8.உண்மை வருமானம்

9.GDP குறைப்பான்

**<u>தேசிய வருவாயை அளவிடும் முறைகள்:</u>**

R.THALAMPOORAJAN

1.உற்பத்தி முறை:

- உற்பத்தி முறை என்பது ஒரு நாட்டின் உற்பத்தியை கணக்கிடுவது ஆகும். இம்முறை **சரக்கு முறை** என்றும் அழைக்கப்படுகிறது.

2.வருமானம் முறை:

- வருமான முறை பகிர்வு பகுதியிலிருந்து அணுகப்படுகிறது. உற்பத்தி நிலைகளில் உற்பத்திக் காரணிகள் பெற்ற அனைத்து வித ஊதியங்களையும் கூட்டி தேசிய வருமானத்தைக் கணக்கிடலாம்.

3.செலவு முறை:

- ஓர் ஆண்டில் சமுதாயத்தில் உள்ளவர்களால் மேற்கொள்ளப்படும் மொத்த செலவுகள் அனைத்தையும் கூட்டி தேசிய வருவாய் கணக்கிடப்படுகிறது.

**<u>தேசிய வருவாய் கணக்கீட்டில் உள்ள சிரமங்கள்:</u>**

1.மாற்றுச் செலுத்துதல்

2.பணம் செலுத்தாத சேவைகள்

3.சட்டவிரோத நடவடிக்கையிலிருந்து பெறும் வருமானம்

4.மூலதன லாபம் 5. புள்ளி விவர சிக்கல்

www.Padasalai.Net



Downloaded From www.nagaicollege.com

## வலுவூட்டல்:

**தேசிய வருவாயின் அடிப்படை கருத்துருக்க**ளின் வாய்ப்பாடுகளை மீண்டும் ஒருமுறை வகுப்பறையில் எழுதச் செய்தல்.

புதிய மற்றும் கடினமான கருத்துக்களை QR CODE SCAN செய்து விளக்கிக் கூறுதல்.

## குறைதீர்கற்றல்:

மெல்லக் கற்கும் மாணவர்களுக்கு பாடப் புத்தகத்தில் உள்ள குறு மற்றும் சிறு வினாக்களுக்கு விடை அளிக்குமாறு பயிற்சி அளித்தல்.

**தொடர்பணி:**

**தேசிய வருவாயின் அடிப்படை கருத்துருக்களின் சூத்திரங்ககளை வகைப்படுத்தி எழுதி வரச் செய்தல்.**

**மதிப்பீட்டு வினாக்கள்:**

1.தேசிய வருவாய் இலக்கணம் கூறுக.

2.NNPக்கும் NDPக்கும் உள்ள வேறுபாடு யாது?

3.தனி நபர் வருமானம் என்றால் என்ன?

4.செலவு முறை பற்றி ஒரு சிறு குறிப்பு வரைக.

5.தேசிய வருவாயின் பயன்களைப் பட்டியலிடுக.

6.தேசிய வருவாயின் முக்கியத்துவத்தை விவரி.

7.தேசிய வருவாய் கணக்கீட்டில் உள்ள சிரமங்கள் யாவை?

R.THALAMPOORAJAN



Downloaded From www.nagaicollege.com

**பாடக்குறிப்பு - பொருளியல்**

**நாள்** :

**வகுப்பு** : 12

**அத்தியாயம்** : 3

**பாடம்** : **வேலைவாய்ப்பு மற்றும் வருமான கோட்பாடுகள்**

**தலைப்பு** : **வேலையின்மை பொருள் - வேலையின்மை வகைகள் - சேயின் சந்தை விதி – விளைவுத் தேவை - தொகு தேவை சார்பு - தொகு அளிப்புச் சார்பு**

**பாடத்தின் நோக்கங்கள்:**

1.முழு வேலைவாய்ப்பு, வேலையின்மை மற்றும் அதன் வகைகளைப் புரிதல்.

2.தொன்மை வேலைவாய்ப்பு கோட்பாட்டினை அறிதல். 3.வருமானம் மற்றும் வேலைவாய்ப்பு தொடர்பான கீன்ஸின் கோட்பாடுகளின் முக்கியத்துவத்தை தெரிதல்.

**ஆயத்தப்படுத்துதல்:**







படங்களைக் காண்பித்து வேலையின்மையின் தன்மையை விளக்குதல்.

**பாட வளர்ச்சி:**

**கற்றல் மற்றும் கற்றல் செயல்பாடுகள்:**

நல்ல உடல் நலம் உள்ள தனி நபர்கள் மற்றும் நிலவுகின்ற கூலி விகிதத்தில் வேலை செய்யத் தயாராக இருப்பவர்கள் அனைவருக்கும் வேலை கிடைக்கிறதெனில் அதனை முழு வேலை வாய்ப்பு என்கிறோம்.

**வேலையின்மை வகைகள்:**

1.வாணிபச்சூழல் வேலையின்மை

2. பருவகால வேலையின்மை

3.தற்காலிக அல்லது பிறழ்ச்சி வேலையின்மை

4. கற்றோர் வேலையின்மை

5.தொழில்நுட்ப வேலையின்மை

6. அமைப்புசார் வேலையின்மை

7.மறைமுக வேலையின்மை



Downloaded From www.nagaicollege.com

**சேயின் சந்தை விதி:**

"அளிப்பு அதன் தேவையை தானே உருவாக்கும்".


எடுத்துக்காட்டுகளுடன் விதியின் எடுகோள்கள்; விளைவுகள் மற்றும் திறனாய்வுகள் விவரிக்கப்படும்.

**விளைவுத் தேவை:**

விளைவு தேவை என்பது உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின் மீது உண்மையிலேயே செலவு செய்கின்ற பணத்தின் அளவு ஆகும்.

**தொகு தேவை சார்பு:** உழைப்பாளர்களைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை விற்பதால் எவ்வளவு வருவாய் கிடைக்கும் என்று தொழில் முனைவோர்கள் எதிர்பார்க்கிறார்களோ அதுவே மொத்த தேவை.

**வரைபடம்:**




AMPOORAJAN

**வரைபட விளக்கம்:**

வரைபடத்தின்படி,

- "E" என்ற புள்ளியில், தொகு தேவை = தொகு அளிப்பு ஆகும்.
- "No" = வேலைவாய்ப்பு
- ON1 அளவு வேலைவாய்ப்பில், தொகு அளிப்பு = N1R1
- M1N1 = உற்பத்தி செய்ய முடியும் அளவு.
- M1R1 =இலாபம் அடைய வேண்டிய உற்பத்தி அளவு மற்றும் உழைப்பாளர்களை வேலைக்கு அமர்த்தும் அளவு
- "E" என்ற புள்ளியில், சமநிலையை அடைந்த பின்பு உழைப்பாளர்கள் வேலைக்கு அமர்த்தப்படமாட்டார்கள்.
- No நிலைக்குப் பிறகு வேலைவாய்ப்பு அதிகரித்தால், தொகு தேவை தொகு அளிப்பைவிட குறைவாக இருக்கும்.
- No மற்றும் N1 இடையே உள்ள வித்தியாசம் வேலையின்மை ஆகும்.

**தொகு அளிப்புச் சார்பு:**

**தொகு அளிப்புச் சார்பு**

என்பது அதிகரிக்கும் வேலைவாய்ப்பைக் குறிப்பிடுகிறது. ஒரு நாட்டில் ஓர் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்கள் மற்றும் பணிகளின் தொகு மதிப்பே தொகு அளிப்பு எனப்படும்.




Downloaded From www.nagaicollege.com

www.Padasalai.Net www.CBSEtips.in

**வரைபடம்:**

மொத்த அளிப்பு வளைகோடு




வரைபட விளக்கம்:

- Z நேர்கோடு என்பது பணக்கூலி மாறாமல் இருக்கும் போது உள்ள நிலையையும்,
- Z1 வேலைவாய்ப்பைப் பொறுத்து பணக்கூலி மாறும் போது உள்ள நிலையையும் விளக்குகின்றன.
- ONf அளவில் பொருளாதாரம் முழுவேலை நிலையை அடைகிறது. அதற்குப் பின்னர் தொகு அளிப்புக்கோடு செங்குத்தாக நெகிழ்வற்றதாக உள்ளது.

## வலுவூட்டல்:

புதிய மற்றும் கடினமான கருத்துக்களை QR CODE SCAN செய்து விளக்கிக் கூறுதல்.

வரைபடத்தை மீண்டும் வரையச் செய்தல்.

## குறைதீர்கற்றல்:

R.THALAMPOORAJAN

மெல்லக் கற்கும் மாணவர்களுக்கு பாடப் புத்தகத்தில் உள்ள குறு மற்றும் சிறு வினாக்களுக்கு விடை அளிக்குமாறு பயிற்சி அளித்தல்.

**தொடர்பணி:**

**ஒப்படைப்பு:**

வேலையின்மையின் வகைகளை எழுதி வரச் செய்தல்.

**மதிப்பீட்டு வினாக்கள்:**

1."முழு வேலை வாய்ப்பு" வரையறு.

2.உடன்பாடில்லா வேலையின்மை பற்றி சிறு குறிப்பு வரைக.

3.சே விதியின் எடுகோள்களைப் பட்டியலிடுக.

4.தொகு அளிப்பின் கூறுகள் யாவை?

5.J.B.சேயின் விதியின் விளைவுகளைப் பற்றி எழுதுக.

6.தொகு அளிப்பை வரைபடம் மூலம் விளக்குக. 7.வேலையின்மையின் வகைகளை விவரி.

8.தொன்மையியத்தையும், கீனிசியத்தையும் ஒப்பிடுக.

9. சேயின் அங்காடி விதியினை திறனாய்வு செய்க.

www.Padasalai.Net



Downloaded From www.nagaicollege.com

**பாடக்குறிப்பு - பொருளியல்**

**நாள்** :

**வகுப்பு** : 12

**அத்தியாயம்** : 4

**பாடம்** : நுகர்வு மற்றும் முதலீடு சார்புகள்

**தலைப்பு** : நுகர்வு பொருள் - முதலீட்டுச் சார்பு – பெருக்கி – முடுக்கி

**துணைக் கருவிகள்: வரைபடம்,** PPT Videos, Educational Games, Newspaper cuttings, Magazines, QR Codes, Online Test.

**பாடத்தின் நோக்கங்கள்:**

1.நுகர்வு மற்றும் முதலீடு சார்புகளின் அடிப்படைக் கருத்துகளை புரிந்து கொள்ளுதல்.

2.பெருக்கி, முடுக்கி சிறப்புப் பெருக்கி ஆகியவற்றின் செயல்பாடுகளை அறிந்து கொள்ளுதல்.

**ஆயத்தப்படுத்துதல்:**



THALAMPOORAJAN

சந்தையில் விற்பனையாகும் பொருட்களை நுகர்வோர் வாங்குவதைக் குறிப்பிட்டு நுகர்வு பற்றி எடுத்துரைத்தல்.

**பாட வளர்ச்சி:**

**கற்றல் மற்றும் கற்றல் செயல்பாடுகள்:**

வருவாய்க்கும், நுகர்வுக்கும் உள்ள தொடர்பு "நுகர்வு சார்வு" ஆகும்.

- **C = f(y)**

**நுகர்வு நாட்டம்:**

- பல்வேறு வருமான நிலைகளில் நுகர்விற்காக செலவிடப்பட்ட வருமானம் **நுகர்வு நாட்டம்** ஆகும்.

**கீன்ஸின் நுகர்வு பற்றிய உளவியல் விதி:**



Downloaded From www.nagaicollege.com

www.Padasalai.Net


இந்த விதி மனிதனின் வருமானம் உயர்ந்த முழு அளவிற்கும் செலவு செய்ய மாட்டார்கள் என எடுத்துரைக்கிறது.

**அட்டவணை:**

விதியின் மூன்று கருத்துரைகள்.

| வருமானம் Y | நுகர்வு C | சேமிப்பு S = Y – C |
|---|---|---|
| 120 | 120 | 0 |
| 180 | 170 | 10 |
| 240 | 220 | 20 |

**வரைபடம்:**



வரைபடம் 4.2

**விளக்கம்:**

- ❖ வருமானம் 180 லிருந்து 240 உயரும்போது நுகர்வை 170 லிருந்து 220 ஆகவும், சேமிப்பை 10 லிருந்து 20 ஆகவும் அதிகரிக்கச் செய்கிறது.
- ❖ C கோட்டிற்கும் $45^0$ கோட்டிற்கும் இடையேயுள்ள அகன்ற பகுதி சேமிப்பைக் காட்டுகிறது.

R.THALAMPOORAJAN

**<u>முதலீட்டுச் சார்பு</u>:**

இது முதலீடு மற்றும் வட்டி வீதத்திற்கு இடையேயான தொடர்பைக் குறிப்பிடுகிறது.

**1.தன்னிச்சை முதலீடு:**

- ❖ தன்னிச்சையான முதலீடு என்பது மூலதனத் திரட்சியின் மீது ஆகும் செலவு ஆகும்.

**2.தூண்டப்பட்ட முதலீடு:**

- ❖ பொருளாதாரம் வளர்ச்சி அடையும் போது அதிகரிக்கின்ற வருமானம் மற்றும் தேவை உயர்வினால் ஏற்படும் நிலையான சொத்து மற்றும் பங்குகள் மீதான செலவே தூண்டப்பட்ட முதலீடு ஆகும்.

www.Padasalai.Net



Downloaded From www.nagaicollege.com

**மூலதனத்தின் இறுதி நிலை உற்பத்தி திறனுக்கும், முதலீட்டின் இறுதிநிலை உற்பத்தி திறனுக்கும் இடையே உள்ள வேறுபாடு:**

| மூலதனத்தின் இறுதிநிலை உற்பத்தித் திறன் (MEC) | முதலீட்டின் இறுதி நிலை உற்பத்தித் திறன் (MEI) |
|---|---|
| 1) இது மூலதனத்தின் அளிப்பு விலையைப் பொறுத்து அமைகிறது | 1) மூலதனத்தின் தேவையில் ஏற்பட்ட மாற்றங்கள், விலையை தூண்டும் மாற்றத்தைப் பொறுத்து அமைகிறது. |
| 2) ஆரம்பத்தில் உள்ள மூலதனத்தை கணக்கில் கொள்ளாமல் ஒவ்வொரு மூலதன அலகிலிருந்து கிடைக்கும் விளைவைக் குறிக்கிறது. | 2) ஆரம்ப மூலதனத்திற்குப் பின்னர் வந்த மூலதனத்தின் விளைவு விகிதத்தைக் காட்டுகிறது. |
| 3) வரைபடத்தில் படுக்கை அச்சில் மூலதன இருப்பு அளக்கப்படுகிறது | 3) வரைபடத்தில் படுக்கை அச்சில் முதலீடு அளவு அளக்கப்படுகிறது. |
| 4) இது ஒரு "இருப்பு" கருத்துரு (stock) | 4) இது ஒரு ஓட்டக் (FLOW) கருத்துரு |
| 5) ஒவ்வொரு வட்டிவீத அளவிலுமான உத்தம மூலதன இருப்பை இது நிர்ணயிக்கிறது | 5) கொடுக்கப்பட்ட மூலதன இருப்பில், ஒவ்வொரு வட்டி வீத அளவிலும் நிகர முதலீடு எவ்வளவு என்பதை நிர்ணயிக்கிறது. |

**<u>பெருக்கி:</u>**

R.THALAMPOORAJAN

தேசிய வருமானத்தின் மாற்றத்திற்கும்,முதலீட்டில் ஏற்படும் மாற்றத்திற்கும் உள்ள வீதத்தை பெருக்கி என்று வரையறுக்கலாம். ஃபார்முலா

**பெருக்கியின் வகைகள்:**

1.இயங்கா பெருக்கி 2.இயங்கும் பெருக்கி


**<u>முடுக்கி:</u>**

அதிகரித்த நுகர்வு மற்றும் அதன் விளைவினால் ஏற்படும் அதிகரிக்கும் முதலீட்டுக்கான தொடர்பை குறிக்கும் எண் மதிப்பு ஆகும்.

$$\text{முடுக்கி } (\beta) = \frac{\Delta I}{\Delta C}$$

**வரைபடம்:**

முருக்கியின் செயல்பாடு




www.Padasalai.Net



Downloaded From www.nagaicollege.com

**வரைபட விளக்கம்:**

- OX - வருமானம்; OY - சேமிப்பு மற்றும் முதலீடு
- SS - சேமிப்பு கோடு; II - முதலீட்டுக் கோடு
- **$E_1$ புள்ளியில்,** சேமிப்பும், முதலீடும் சமநிலை ($OY_1 = OI_2$) முதலீடு OI4 அளவு அதிகரிக்கும் போது வருமானம் $OY_3$ ஆக அதிகரிக்கிறது.
- **$E_3$ புள்ளியில்,** $I_2$ $I_4$ ஆக முதலீடு முழுவதுமாக வெளிப்புறக் காரணியில் அதிகரிக்கின்றது.
- வருமானம் $Y_1Y_3$ ஆக முடுக்கியின் விளைவாக அதிகரிக்கும். அதிகரித்த வருமானம், $Y_1Y_2$ ஆனது பெருக்கியின் விளைவாலும், மற்றும் அதிகரித்த வருமானம் $Y_2Y_3$ஆனது முடுக்கியின் விளைவாலும் ஏற்படுகின்றது.

## வலுவூட்டல்:

- புதிய மற்றும் கடினமான கருத்துக்களை QR CODE SCAN செய்து விளக்கிக் கூறுதல்.
- அட்டவணை மற்றும் வரைபடத்தை மீண்டும் வரையச் செய்தல்.

## குறைதீர்கற்றல்:

- மெல்லக் கற்கும் மாணவர்களுக்கு பாடப் புத்தகத்தில் உள்ள குறு மற்றும் சிறு வினாக்களுக்கு விடை அளிக்குமாறு பயிற்சி அளித்தல்.

**மதிப்பீட்டு வினாக்கள்:**

1.நுகர்வுச் சார்பு என்றால் என்ன?

2.நுகர்வு நாட்டம் என்றால் என்ன?

3.சேமிப்பு நாட்டம் என்றால் என்ன?

4.இறுதி நிலை சேமிப்பு நாட்டம் வரையறு.

5 பெருக்கி வரையறு.

6.முடுக்கி வரையறு.

7.தனிச்சியான முதலீடு மற்றும் தூண்டப்படுகிற முதலீடு ஆகியவற்றை வேறுபடுத்துக.

8.முடுக்கிக்கும் பெருக்கிக்கும் உள்ள வேறுபாடுகளை விளக்குக.

9.கீன்ஸின் நுகர்வு சார்பின் உளவியல் விதியினை வரைபடம் மூலம் விளக்குக.

10 மூலதனத்தின் இறுதிநிலை உற்பத்தித் திறனுக்கும், முதலீட்டின் இறுதிநிலை உற்பத்தித் திறனுக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?

R.THALAMPOORAJAN
www.Padasalai.Net



Downloaded From www.nagaicollege.com

**பாடக்குறிப்பு - பொருளியல்**

**நாள்** :

**வகுப்பு** : 12

**அத்தியாயம்** : 5 (பகுதி -1)

**பாடம்** : பணவியல் பொருளியல்

**தலைப்பு** : பணம் – இலக்கணம், பணப்பரிவர்த்தனை வளர்ச்சி - பணத்தின் பணிகள்

**துணைக் கருவிகள்: வரைபடம்,** PPT Videos, Educational Games, Newspaper cuttings, Magazines, QR Codes, Online Test.

**ஆயத்தப்படுத்துதல்:**



R. THALAMPOORAJAN

**பண்டமாற்று முறை தொடர்பான படங்களைக் காண்பித்தல்.**

பணத்தின் பரிணாம வளர்ச்சியான பண்டமாற்று முறையிலிருந்து கூறுதல்

**பாடத்தின் நோக்கங்கள்:**

1. பணத்தில் பரிமாண வளர்ச்சி, வகைகள், பணிகள், பணவீக்கத்தின் வகைகள், காரணங்கள், விளைவுகள் மற்றும் கட்டுப்படுத்தும் வழிமுறைகளை புரிந்து கொள்ளல்.

2.வணிகச் சுழற்சியின் பல்வேறு கட்டங்களைத் தெரிந்து கொள்ளல்.

**பாட வளர்ச்சி:**

**கற்றல் மற்றும் கற்றல் செயல்பாடுகள்:**

**பணம்: இலக்கணம்:**


"பணம் எதைச் செய்கிறதோ அதுவே பணம்" - வாக்கர்.

"பரிவர்த்தனைகளில் பொது ஏற்புத்தன்மை கொண்ட ஒரு இடையீட்டுக் கருவியாகவும், மதிப்பளவை மற்றும் மதிப்பினை இருப்பு வைத்தல் ஆகியவற்றினைச் செய்யும் ஒன்றாகவும் இருப்பது பணம் ஆகும்". - கிரௌதர்.



Downloaded From www.nagaicollege.com

**பணப்பரிவர்த்தனை வளர்ச்சி:**




**பணத்தின் பணிகள்:**

**1.முதல்நிலைப் பணிகள்:**

அ) பணம் ஓர் பரிவர்த்தனை கருவி

ஆ)பணம் ஓர் மதிப்பின் அளவுகோல்

R.THALAMPOORAJAN

**2.இரண்டாம் பணிகள்:**

அ) பணம் ஒரு மதிப்பு நிலைகலன்

ஆ)பணம் வருங்கால செலுத்துதல்களுக்கான ஓர் அடிப்படை

இ)பணம் வாங்கும் திறனை மாற்றிக் கொள்ளும் ஒரு கருவி

**3.துணைப் பணிகள்:**

அ) கடனுக்கான அடிப்படை ஆ)பணம் தேசிய வருவாய் பங்கீட்டிற்கு உதவுகிறது இ)இறுதிநிலைப் பயன்பாடுகளை ஒப்பிடவும் இறுதிநிலை உற்பத்தி திறன்களை ஒப்பிடவும் பணம் பயன்படுகிறது. ஈ)பணம் மூலதனத்தின் உற்பத்தி திறனை உயர்த்துகிறது.

**4.இதர பணிகள்:**

அ) திரும்பச் செலுத்தும் திறனை தக்க வைக்க பணம் உதவுகிறது

ஆ) பணம் பொதுமைப்படுத்தப்பட்ட வாங்கு திறனை குறிக்கிறது இ)பணம் மூலதனத்திற்கு நீர்மைத் தன்மையை தருகிறது.

www.Padasalai.Net



Downloaded From www.nagaicollege.com

## வலுவூட்டல்:

புதிய மற்றும் கடினமான கருத்துக்களை QR CODE SCAN செய்து விளக்கிக் கூறுதல்.

## குறைதீர்கற்றல்:

மெல்லக் கற்கும் மாணவர்களுக்கு பாடப் புத்தகத்தில் உள்ள குறு மற்றும் சிறு வினாக்களுக்கு விடை அளிக்குமாறு பயிற்சி அளித்தல்.

**<u>மதிப்பீட்டு வினாக்கள்:</u>**

1.பணத்தின் இலக்கணம் வரைக.

2.பண்டமாற்று என்றால் என்ன?

3.பொன் திட்டம் என்றால் என்ன?

4.நெகிழிப் பணம் என்றால் என்ன? உதாரணம் தருக.

5.உலோகப் பணம் பற்றி ஒரு குறிப்பு வரைக.

6.பணத்தின் பணிகளை விளக்குக.

7. கொள் குறிவகை வினாக்கள்.

R.THALAMPOORAJAN

www.Padasalai.Net



Downloaded From www.nagaicollege.com

**பாடக்குறிப்பு - பொருளியல்**

**நாள்** :

**வகுப்பு** : 12

**அத்தியாயம்** : 5 (பகுதி -2)

**பாடம்** : பணவியல் பொருளியல்

**தலைப்பு** : பண அளிப்பு - பண அளவுக் கோட்பாடுகள் – பணவீக்கம்;- வகைகள், காரணங்கள் - வணிகச் சுழற்சி.

**துணைக் கருவிகள்: வரைபடம்,** PPT Videos, Educational Games, Newspaper cuttings, Magazines, QR Codes, Online Test.

**பாடத்தின் நோக்கங்கள்:**

1. பணத்தில் பரிமாண வளர்ச்சி, வகைகள், பணிகள், பணவீக்கத்தின் வகைகள், காரணங்கள், விளைவுகள் மற்றும் கட்டுப்படுத்தும் வழிமுறைகளை புரிந்து கொள்ளல்.

2.வணிகச் சுழற்சியின் பல்வேறு கட்டங்களைத் தெரிந்து கொள்ளல்.

**ஆயத்தப்படுத்துதல்:**





பணம் அளிப்பு பற்றிய கதைகளை கூறுதல்.

**பாட வளர்ச்சி:**

**கற்றல் மற்றும் கற்பித்தல் செயல்பாடுகள்:**

**பண அளிப்பு:** ஒரு பொருளாதாரத்தில் உள்ள மொத்தப் பண அளவே பண அளிப்பு ஆகும். ஒரு குறிப்பிட்ட நேரத்தில் நாட்டில் புழக்கத்தில் உள்ள பண அளவைக் குறிப்பதே பண அளிப்பு ஆகும்.

**பண அளவுக் கோட்பாடுகள்:**

அ) ஃபிஷரின் பண அளவுக் கோட்பாடு


MV = PT or P = MV / T M = பண அளிப்பின் அளவு V = பணத்தின் சுழற்சி வேகம்

P = பொது விலை மட்டம் T = வாணிபத்தின் அளவு



Downloaded From www.nagaicollege.com

வரைபடம்:




**விளக்கம்:** பண மதிப்புச் சார்பு O/P = f(M)க்கான வளைகோடு மேலிருந்து கீழ்நோக்கி சரிந்து பண அளவிற்கும் பணமதிப்பிற்கும் உள்ள எதிர்மறையான மற்றும் சமவிகித தொடர்பினை சுட்டிக்காட்டுகிறது.

**ஆ) கேம்பிரிட்ஜ் அணுகுமுறை:** மார்ஷல் கூற்றுப்படி, பணஅளவு (M) என்ற காரணியைவிட மக்கள் தங்கள் கையில் ரொக்கமாக வைத்திருக்க விரும்பும் உண்மை வருமானத்தின் பகுதி (K என்ற கெழு) பணமதிப்பினை தீர்மானிப்பதில் மிக முக்கிய பங்கினை வகிக்கிறது.

- **M = KPY**

**பணவீக்கம்:** பணவீக்கம் என்பது தொடர்ச்சியான மற்றும் குறிப்பிடும்படியான பொது விலை மட்ட அதிகரிப்பு ஆகும்.

R.THALAMPOORAJAN

**பண வீக்கத்தின் வகைகள்:**

1.தவழும் பணவீக்கம் 2.நடக்கும் பணவீக்கம் 3.ஓடும் பணவீக்கம் 4.தாவும் பணவீக்கம்

**பண வீக்கத்திற்கான காரணங்கள்:**

1.பண அளிப்பு உயர்வு
2.செலவிடத் தகுந்த வருவாயில் உயர்வு
3.உயர்ந்து வரும் பொதுச் செலவுகள்
4. நுகர்வோர் செலவு அதிகரித்தல்
5.மலிவு பணக் கொள்கை
6.பற்றாக்குறை நிதியாக்கம்
7.கணக்கில் காட்டப்படாத சொத்துக்கள், நடவடிக்கைகள் மற்றும் கருப்பு பணம்
8.பொதுக்கடனை மீளச் செலுத்துதல்
9. ஏற்றுமதி உயர்வு

**வணிகச் சுழற்சி:**

**இலக்கணம்:** வேலைவாய்ப்பு, உற்பத்தி, வருமானம் போன்றவற்றை உள்ளடக்கிய ஒட்டுமொத்த பொருளாதார நடவடிக்கைகளில் ஏற்படும் அலைவுகளே **வணிகச் சுழற்சி** என குறிப்பிடப்படுகிறது.



Downloaded From www.nagaicollege.com

**வாணிபச் சுழற்சியின் கட்டங்கள்:**

**<u>வரைபடம்:</u>**




## வலுவூட்டல்:

புதிய மற்றும் கடினமான கருத்துக்களை QR CODE SCAN செய்து விளக்கிக் கூறுதல்.

வரைபடத்தை மீண்டும் வரையச் செய்தல்.

## குறைதீர்கற்றல்:

மெல்லக் கற்கும் மாணவர்களுக்கு பாடப் புத்தகத்தில் உள்ள குறு மற்றும் சிறு வினாக்களுக்கு விடை அளிக்குமாறு பயிற்சி அளித்தல்.

**<u>மதிப்பீட்டு வினாக்கள்:</u>**

1.பண வீக்கம் என்பதன் இலக்கணம் தருக.

2.பண வீக்கத்தின் வகைகளைப் பற்றி எழுதுக.

R.THALAMPOORAJAN

3.பண மதிப்பு பற்றிய கேம்பிரிட்ஜ் சமன்பாடுகளை விளக்குக.

4.இர்விங் ஃபிஷரின் பண அளவுக் கோட்பாட்டினை விளக்குக.

5.ஒரு பொருளாதாரத்தில் பணம் வீக்கத்திற்கான காரணங்கள் மற்றும் விளைவுகள் யாவை?

6.வணிகச் சுழற்சியின் பல்வேறு கட்டங்களை விவரிக்க.

www.Padasalai.Net



Downloaded From www.nagaicollege.com